# 15 தொல்பொருள்களைப் பேணுவோம்



நாவலர் வித்தியாலயத்தைச் சேர்ந்த தரம் ஐந்து மாணவர்களும் வகுப்பாசிரியரும் களப்பயணம் ஒன்றை மேற்கொண்டனர். பொலன்னறுவையிலுள்ள வரலாற்று முக்கியத்துவம்மிக்க இடங்களைப் பார்வையிடுவதே அவர்களின் நோக்கமாகும். முதலில், அங்குள்ள சிவன் கோயிலின் வாயிலை அடைந்தனர். கடுமையான வெயில் அனைவருக்கும் தாகம் எடுத்தது. குமார் அருகில் இருந்த வியாபாரியிடம் இளநீர் வாங்கிப் பருகினான்.

**கபிலன்** : குமார் எனக்கும் இளநீர் தருவாயா?

**குமார்** : வா! இருவரும் சேர்ந்து குடிப்போம். இளநீரை எவ்வாறு உடைப்பது? கபிலனிடம் கேட்டான் குமார்.

**காந்தன்** : இதோ இந்த வாயிற் கல்லில் அடித்து உடைத்து உண்ணலாம். (குமார் வாயிற் கல்லில் இளநீரை அடித்து உடைக்கத் தயாரானான்)

**ஆசிரியர்** : நிறுத்து குமார்! என்ன காரியம் செய்யப்போகின்றாய்? இந்த ஆலய வாயிற்கல் எமது தொல்பொருளாகும். இவற்றை நாம் பேணிப் பாதுகாக்க வேண்டும்.

**குமார்** : என்னை மன்னியுங்கள்; தொல்பொருள்கள் என்றால் என்ன என்று எமக்கு விளக்கமாகக் கூறுவீர்களா?

**ஆசிரியர்** : புராதன மக்களால் கட்டப்பட்ட கட்டடங்கள், வணக்கத் தலங்கள், சிற்பங்கள், உபகரணங்கள், சின்னங்கள் போன்ற தொன்மையான பொருள்களும் அகழ்வாராய்ச்சியின் போது கண்டெடுக்கப்படும் சிலைகள், நாணயங்கள், கல்வெட்டுகள், சிதைவுகள் என்பனவும் தொல்பொருள் களாகும். இவற்றில் பல மண்ணில் புதைந்தும் நீரில் அமிழ்ந்தும் காணப்படுகின்றன.

**அமுதா** : ஏன் நாம் இவற்றைப் பாதுகாக்க வேண்டும்?

**ஆசிரியர்** : இவை எமது தேசிய சொத்துக்கள். ஓர் இனத்தின் அடையாளம். எமது பண்டைய காலச் சிறப்புக்களை எதிர்கால சந்ததியினர் அறிந்து கொள்ளும் விதமாக இவற்றைப் பேணிப் பாதுகாக்க வேண்டும்.

**காந்தன்** : தொல்பொருள்கள் எவ்வாறு அழிவடைகின்றன?

**ஆசிரியர்** : மழை, வெயில், இயற்கை அனர்த்தம் போன்ற காரணிகளால் அழிவடைகின்றன. மேலும் யுத்தத்தாலும் மனித செயற் பாடுகளாலும் அதிகம் சேதப்படுத்தப்படுகின்றன.

**ரூபிணி** : மனிதர்களால் சேதமாக்கப்படுகின்றதா? சற்று விளக்கமாகக் கூறுங்களேன்.

**ஆசிரியர்** : ஆம், விளக்கமாகக் கூறுகிறேன் அனைவரும் கேளுங்கள். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப்

பார்வையிட வரும் சுற்றுலாப் பயணிகள் சிலர் கலைப் படைப்புகளை உடைத்தல், கிறுக்குதல், திருடுதல் போன்ற செயல்களில் ஈடுபடுகின்றனர். இதனால் எமது தேசத்தின் பெறுமதிமிக்க சொத்துக்கள் சேதமடைகின்றன.

**குமார்** : அப்படியென்றால் நாம் இவற்றை எவ்வாறு பாதுகாப்பது?

**ஆசிரியர்** : புராதன கட்டடங்கள், சிற்பங்களைச் சேதமாக்கக் கூடாது. அவ்விடங்களில் காணப்படும் விதிமுறைகளைக் கடைப் பிடிக்க வேண்டும். இதை மீறினால் நாம் தண்டனைக்கு உள்ளாவோம்.

**அமுதா** : ஆமாம்! இங்கே பாருங்கள். இவ்விடத்தில் ''சிற்பங்களைத் தொடவேண்டாம்'' என்ற அறிவித்தல் எழுதப்பட்டுள்ளது. இவற்றைப் பாதுகாப்பவர்கள் யார்?

**ஆசிரியர்** : இவை தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்களத்தாலும், பாதுகாப்புப்படையாலும் பாதுகாக்கப்படுகின்றன. இந்த நாட்டு மக்களான நாமும் இவற்றைப் பாதுகாக்க வேண்டும்.

**அஸ்வர்** : உண்மைதான்! நாம் இந்நாட்டின் பிரசைகள். இவற்றைப் பேணிப் பாதுகாப்பது எமது தலையாய கடமையாகும்.

**ஆசிரியர்** : வாருங்கள், நாம் ஏனைய இடங்களையும் பார்வையிடு வோம். (மகா பராக்கிரமபாகு மன்னனின் அரச சபை, கல்விகாரையின் புத்தர் சிலை, தாமரைத் தடாகம் போன்ற இடங்களைப் பார்வையிட்ட அனைவரும் பராக்கிரமபாகு சமுத்திரத்திற்கு அருகிலுள்ள ஓரிடத்தில் வந்து அமர்ந்தனர்.)

**அகிலா** : இன்று நாம் பல விடயங்களை அறிந்து கொண்டோம். அவற்றின் பெறுமதியையும் அறிந்து கொண்டோம். இவற்றைக் கேட்பதற்கு எமக்குப் பெருமையாக இருக்கிறது. இன்று தொடக்கம் நாம் அனைவரும் எமது நாட்டின் ''தொல்பொருள்களைப் பேணிப் பாதுகாப்போம்'' என உறுதி பூணுவோம்.

**ஆசிரியர்** : மிக்க மகிழ்ச்சி.

(ஆசிரியர் எல்லா மாணவர்களுக்கும் மிட்டாய் வாங்கிக் கொடுத்தார். அனைவரும் மன நிறைவுடன் தமது பாடசாலையை நோக்கிப் புறப்பட்டனர்.)

**அகராதிப் பயன்பாடு**




காரியம் -
சிற்பம் -
ஆராய்ச்சி -
தடாகம் -
உறுதி -
தொல்பொருள் -

**பயிற்சி**

## 15.1 பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

1. மாணவர்கள் களப்பயணம் சென்ற இடம் எது?
2. தொல்பொருள்கள் மூன்று தருக.
3. தொல்பொருள்களை ஏன் பாதுகாக்க வேண்டும்?
4. தொல்பொருள்களைப் பாதுகாப்பது எப்படி?
5. உமது பிரதேசத்தில் காணப்படும் தொல்பொருள்கள் எவை?

## 15.2 பின்வரும் சொற்களைக் கொண்டு வாக்கியம் எழுதுவோம்.

i. தாகம் - ____________ ii. புராதனம் - ____________

iii. தண்டனை - ____________ iv. வாரிசுகள் - ____________

v. கடமை - ____________ vi. புத்தர் சிலை - ____________

## நிறுத்தக்குறிகள்

படிக்கும்பொழுது, பொருள் உணர்வுக்கு ஏற்ப, நிறுத்த வேண்டிய இடங்களில் நிறுத்தியும் சேர்க்க வேண்டிய இடங்களில் சேர்த்தும் வியப்பு, அச்சம், வினா முதலான உணர்வுகள் வெளிப்படுத்த வேண்டிய இடங்களில் அவற்றை வெளிப்படுத்திப் வாசிக்கச் சில குறியீடுகளைக் கையாளுகிறோம். அவற்றையே நிறுத்தக்குறிகள் என அழைக்கின்றோம்.

1. முற்றுப்புள்ளி (.) உதாரணம்: நான் பாடல் பாடினேன்.
2. காற்புள்ளி (,) உதாரணம்: சனி, ஞாயிறு வார இறுதி நாட்களாகும்.
3. வினாக்குறி (?) உதாரணம்: நாங்களும் விளையாடுவோமா?
4. வியப்புக்குறி (!) உதாரணம்: ஆகா! இது எவ்வளவு பெரிய நீர்வீழ்ச்சி!
5. மேற்கோள்குறி (“ ”) உதாரணம்: “சிற்பங்களைத் தொட வேண்டாம்” என்று கூறினார்.

## 15.3 பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுவோம்.

1. இலங்கையின் பழைமையான நகரங்களுள் அநுராதபுரமும் ஒன்றாகும்
2. நம் நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்டவர்கள் யாவர்
3. திருக்குறளை உலகப் பொதுமறை என்று நாம் பாராட்டுகிறோம்
4. குழந்தைகளே இங்கே வாருங்கள்
5. தோட்டத்தில் சிவப்பு நீலம் மஞ்சள் வெள்ளை நிற மலர்கள் காணப்படுகின்றன
6. கல்விக்கு அழகு கசடற மொழிதல் என்றனர் எம் முன்னோர்கள்
7. நீ இங்கே வா என்று ஆசிரியர் அழைத்தார்
8. சூரியன் சந்திரன் அக்கினி என்பன முச்சுடர்களாகும்
9. ஆகா எவ்வளவு அழகான பூங்கா
10. நேத்திரம் என்பதன் பொருள் யாது

## 15.4 வாக்கியங்களில் வரவேண்டிய "நிறுத்தக்குறிகளை" உரிய இடத்தில் இடுவோம்.

இன்று ஒரு மிருகத்தைக் கூட வேட்டையாட முடியவில்லையே யார் முகத்தில் விழித்தேன் என அரசர் யோசித்தார் உடனே காலையில் முதல் முதலாகப் பார்த்த முல்லாவின் முகம் நினைவுக்கு வந்தது அரசர் காவலாளர்களை அழைத்தார் முல்லாவைத் தேடிப்பிடிக்கக் கட்டளை இட்டார் காவலாளர்கள் முல்லாவைக் கண்டு பிடித்தனர் அரசர் முன் நிறுத்தினர் முல்லாவைக் கண்ட அரசர் கோபம் கொண்டார் முல்லாவைப் பார்த்து அறிவு கெட்டவனே காலை உன் முகத்திலேயே விழித்தேன் ஒரு மிருகத்தைக் கூட வேட்டையாட முடியவில்லை நீ ஒரு இராசி இல்லாதவன் என்று கோபத்துடன் கத்தினார் காவலர்களே முல்லாவிற்கு நூறு சவுக்கடி கொடுங்கள் எனக் கட்டளை இட்டார் உடனே முல்லா மன்னா நீங்கள் என் முகத்தில் விழித்தீர்கள் உங்களுக்கு வேட்டை கிடைக்கவில்லை நான் உங்கள் முகத்தில் விழித்தேன் எனக்கு நூறு சவுக்கடிகள் கிடைக்கப்போகிறது இதில் யார் முகம் ராசி இல்லாதது என்று யோசித்துத் தீர்ப்பு வழங்குங்கள் என்று கூறி நகைத்தார் முல்லா அரசர் திகைத்தார்

## 15.5

### (அ) கீழே தடித்த எழுத்தில் காணப்படும் மரபுத் தொடர்களின் கருத்தை எழுதுவோம்.

1. தாயின் மடியில் குழந்தை **கண் வளர்ந்தது.**
2. பாலன் கல்வி கற்பதற்கு அவனது நண்பர்கள் **தோள் கொடுத்தனர்.**
3. மாணவனின் சாதனையைக் கேள்வியுற்ற ஆசிரியர் **உச்சி குளிர்ந்தார்.**
4. நாம் மற்றவர்களின் மனதைப் **புண்படுத்தல்** ஆகாது.
5. அரசன் அயல் நாட்டு மன்னனை **அறைகூவி** அழைத்தான்.
6. முரளி தனது நண்பனுடன் **ஒளிவுமறைவு** இன்றிப் பழகினான்.
7. செந்தில் **கண்மூடித்தனமாக** வாகனம் செலுத்தினான்.
8. கண்ணகி தன் கணவன் கள்வன் அல்ல என்று **ஆணித்தரமாகக்** கூறினாள்.

தமிழ் – 5

**(ஆ) கீழே தரப்பட்டுள்ள மரபுத்தொடர்களைப் பயன்படுத்தி வாக்கியங்களை எழுதுவோம்.**

உதாரணம்: எதிர் நீச்சல் - எதிர்த்துப் போராடுதல்.

வாழ்க்கையில் எத்தனை தோல்விகள் வந்தாலும், மனந்தளராமல் எதிர் நீச்சல் போட்டு வெற்றியடைய வேண்டும்.

1. காது குத்துதல். 2. வயிற்றெரிச்சல். 3. கடன் கழித்தல்.
4. கண் திறத்தல். 5. அவசரக் குடுக்கை. 6. அள்ளிக் குவித்தல்.

## 15.6

**(அ) பின்வரும் ஒருமை வாக்கியங்களை பன்மை வாக்கியங்களாக மாற்றி எழுதுவோம்.**

உதாரணம்: கற்ற இளைஞன் விவசாயம் செய்ய முன்வர வேண்டும்.
கற்ற இளைஞர்கள் விவசாயம் செய்ய முன்வர வேண்டும்

i. மீன் நீரில் வாழும்.
ii. குரங்கு மரத்திற்கு மரம் தாவித் திரிந்தது.
iii. மரத்தினது வேர் நீரை நாடிச் சென்றது.
iv. காவலன் அவனைக் காட்டிலே கண்டுபிடித்தான்.
v. பசு பச்சைப் புல்லைத் தின்று வெள்ளைப் பாலைப் தருகிறது.

**(ஆ) பின்வரும் வாக்கியங்களை ஒருமை வாக்கியங்களாக மாற்றி எழுதுவோம்.**


உதாரணம்: எங்களுக்கு நல்ல காலம் பிறக்கும்.
எனக்கு நல்ல காலம் பிறக்கும்.

i. பிள்ளைகள் மர நிழலில் இருந்து விளையாடினார்கள்.
ii. நாங்கள் பானம் அருந்த வந்தோம்.
iii. மாலுமிகள் கப்பலைச் செலுத்தினார்கள்.
iv. சிறுவர்கள் தந்தை குறிப்பிட்ட இடத்திலேயே நின்றார்கள்.
v. மரத்திலிருந்து விழுந்த பழங்கள் நிலத்திலே கிடந்தன.





இலவசப் பாடநூல்

## 15.7 பின்வரும் பந்தியில் காணப்படும் இடைவெளிகளுக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து எழுதுவோம்.




தமிழில் சிலப்பதிகாரம், மணிமேகலை .............................. போன்ற இனிய .............................. உள்ளன. இவை மிகவும் பழைமையானவை. படிக்கும் போது உள்ளத்தை உருக்கும் .............................. உடையவை. தற்காலத்திலேயே ............................., கவிமணி போன்ற கவிஞர்கள் இனிய எளிய நடையில் பல நூல்களை இயற்றியுள்ளனர்.

## 15.8 படத்திலுள்ள சொற்களை இனங்கண்டு எழுதுவோம்.




தமிழ் - 5